**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**<u>அசல் வழக்கு எண். 35 /2022</u>**

பெயர் : மனோகரன் P.W.1. Cross Continuation

த/பெ. : காத்தான்

தேதி : 29.01.2026

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

1. சாட்சி அனுமதியின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சியாக செய்யப்படுகிறார். தற்போது தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் எனது அனுபவத்தில் உள்ளது. தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் பத்திரம் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். எனது பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் எனது வழக்கறிஞரிடம் உள்ளது. தாவா சொத்தில் தற்போது யார் பயிர் செய்து வருகிறார் என்றால் நான் தான் பயிர் செய்து வருகிறேன். தாவா சொத்திற்கு நான் பயிர் காப்பீடு செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே பயிர் செய்திருந்தால் நான் பயிர் காப்பீடு செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றாலும், நான் பயிர் செய்து வரவில்லை என்றாலும் இந்த வழக்கிற்காக பயிர் செய்வதாக கூறி பொய் சாடசியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் சிட்டா, அடங்கல் 1ம் பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை கிரயம் வாங்கி உள்ளார் என்றாலும், மேலும் ஆதாயம் பெறுவதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எனவே, நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.